# சிகரம்

உயர்தரமாணவர் ஒன்றியம் 2002

இந்துக் கல்லூரி

கொழும்பு 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கீதம்

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

**பல்லவி**

வாழ்த்துவோம் வணங்குவோம்
வானளாவும் புகழோங்க (வாழ்)

**அனுபல்லவி**

கொழும்பமர் இந்துக்கல்லூரி
செழுந்தமிழ் மலரின் நியமமதனை (வாழ்)

**சரணம்**

ஞானமுடிவில் அறந்தரு வள்ளுவன்
கான நடம் கூத்து காட்டும் இளங்கோ
மோன முத்தமிழ் வித்தகர் கம்பர்
தேனிசை பாரதி சேர்ந்தியல் நியமத்தை (வாழ்)



# கொழும்பு இந்துக் கல்லூரி

**உயர்தர மாணவர் ஒன்றியம் - 2002**

பெருமிதத்தோடு அரங்கேற்றும்

## "உயர்தர மாணவர் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல் 2002"

**காலம்:-** 13-11-2002 புதன்கிழமை

**இடம்:-** கல்லூரி பிரதான மண்டபம்

**நேரம்:-** மு.ப. 10.00 மணி

பிரதம விருந்தினர்:

**திரு. கந்தையா நீலகண்டன்**

(சட்டத்தரணி)
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்
செயலாளர்
இந்து வித்தியா விருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம விருந்தினரின்

# வாழ்த்துச் செய்தி

இந்து மக்களின் பண்பாட்டைப் பேணி எமது கலாசாரப் பின்னணியில் எமது பிள்ளைகள் வளர வேண்டும் என்ற நல்ல நோக்குடன் 1951 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிள்ளையார் பாடசாலை இன்று வளர்ந்து தேசியக் கல்லூரியாகப் பிரகாசிக்கின்றது.

இன்றைய நவீன உலக எதிர்பார்ப்புக்களுக்கு ஈடுகொடுத்து இக்கல்லூரி வளர்ந்திருப்பதை மகிழ்வுடன் கூற வேண்டும்.

இக்கல்லூரியின் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களின் **"வருடாந்த ஒன்றுகூடல்"** அவர்களின் வளர்ச்சிப் பாதையில் நல்லதொரு கலங்கரை விளக்கு. நாளைய தலைவர்களாகிய இன்றைய இளைஞர்கள் திறமைத்துவப் பயிற்சியில் ஊக்கம் பெறவும், சமூக தொடர்பு வளத்தைப் பெருக்கவும் இப்படியான நிகழ்வு நிச்சயம் களம் அமைத்துக் கொடுக்கும்.

இந்நிகழ்வில் கலந்து இந்துவின் இளைஞர்களுக்கு உற்சாகம் தர எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக மகிழ்வதுடன் நன்றியையும் கூறி வைக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

**திரு. கந்தையா நீலகண்டன்**

(சட்டத்தரணி)
பொதுச்செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்,
செயலாளர்,
இந்து வித்தியா விருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரி அதிபரின்

# ஆசிச்செய்தி


கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பினைக் கொண்டிருக்கும் அனேக பாடசாலைகளில் செயல்திறன் மிக்கதும் பலம் வாய்ந்ததுமான மன்றமாக் விளங்குவது "உயர்தர மாணவர் ஒன்றியம்" ஆகும். ஏனைய மன்றங்களைப்போல் அல்லாது உயர்தர வகுப்புக்களில் சகல துறைகளிலும் கல்வி பயிலும் அனைத்து மாணவரையும் உள்ளடக்கிய மன்றமாகத் திகழ்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தொடர்ச்சியான, கடினமான கற்றலில் தமது இரண்டு வருட காலங்களை உயர்தர மாணவர், பாடசாலைகளிலே கழிக்க வேண்டியுள்ளது. இவர்களுள் பல்கலைக்கழகத் தெரிவுக்குத் தம்மை தயார்ப்படுத்துவோரும், ஏனைய உயர்கல்வி வாய்ப்பு களுக்காகத் தயார்ப்படுத்துவோரும், தொழில்துறைப் பயிற்சிக்கான வழிகாட்டல்களைத் தேடுவோருமாக பல்வேறு தெரிவுகளைக் கொண்டவர்கள் இருக்கின்றனர். எனவே எதிர்காலம் பற்றிய சரியான பொருத்தமான தெரிவினை இவர்களுக்கு வழங்க வேண்டியது பாடசாலைகளின் பாரிய பொறுப்பாக அமைகின்றது.

இந்த வகையில் எமது கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியம் வாரந்தோறும் கூட்டங்களை நடாத்தி, உயர் கல்வித் துறை, தொழில் வாய்ப்பு என்பன பற்றிப் பொருத்தமானவர்களையும், தகுதி வாய்ந்தவர்களையும் வரவழைத்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது பாராட்டுதற்குரியது.

மேலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் தமது ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதற்கும் இத்தகைய நிகழ்ச்சிகள் வழிவகுக்கின்றன. தலைமை தாங்குதல், பொறுப்பேற்றல், ஒத்துழைத்தல், உரிய நேரத்திற்குக் கடமையாற்றுதல், புரிந்துணர்வு, நட்புரிமை என்பவற்றை இந்த மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. எனவேதான் உயர்தர மாணவரைப் பொறுத்தவரை இந்த ஒன்றியம் **"வருடாந்த ஒன்றுகூடல் 2002"** நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து அவர்களுக்கு புத்துணர்வு அளிக்க இருக்கிறது.

கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியம் ஒழுங்கு செய்திருக்கும் வருடாந்த ஒன்றுகூடலின்போது **"சிகரம்"** எனும் இதழை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். உயர்தர மாணவர்களுக்குப் பயன்தரும் பல அம்சங்களை இவ்விதழ் தாங்கி வருகின்றது. மேலும் இந்த மன்றத்தை நல்ல முறையில் நெறிப்படுத்தி வரும் பொறுப்பாசிரியர் திரு. K. சேய்ந்தன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் எமது கல்லூரியின் கலாசாரத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்திருக்கும் ஏனைய பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர் களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இன்றைய பொழுது அனுபவங்களையும், ஆற்றல்களையும் பகிர்ந்து கொள்ளும் இனிய பொழுதாக அமைய எனது நல்லாசிகள் உரித்தாகுக.



**தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி**
அதிபர்,
இந்துக் கல்லூரி,
கொழும்பு-04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின்

# வாழ்த்துச்செய்தி

வளர்ந்து வரும் இன்றைய நவீன உலகில், எதிர்காலப் பிரஜைகளான இளம் மாணவர்களின் ஆளுமை விருத்தியை வளர்த்துக் கொள்வதில் உயர்தர மாணவர் ஒன்றியம் ஆற்றி வருகின்ற பணி குறிப்பிடக்கூடியது. இன்று மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமையாலும், அவர்கள் பாடசாலை முடிந்து பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதாலும் உலக விபரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டத் தவறுகின்றமை மிகவும் வேதனைக்குரியது. கற்றல் தவிர்ந்த புறக்கிருத்தியச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறுகின்றனர். மாணவர்களை ஆளுமை வளர்ச்சியுடன் பூரணத்துவமுடைய வனாக்குவதற்கு மன்றச் செயற்பாடுகள் உதவுகின்றன. இவ் வகையில் எமது கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களுக்கு பல்வேறு துறைகளிலும் பரந்துபட்ட அறிவை வழங்கும் நோக்கில் வாராவாரம் இரண்டு பாடவேளைகளை உயர்தர மாணவர் மன்றச் செயற்பாடு களுக்கு என ஒதுக்கி ஊக்குவித்து வருகின்றோம்.


மன்றம் தனது குறுகிய காலப்பகுதியில் அடைந்த வெற்றிகள், செயற்பாடுகள் என்பவற்றைக் கண்டு பொறுப்பாசிரியர் என்ற வகையில் பெருமிதம் அடைகின்றேன். மாணவர்கள் பயன்பெறக் கூடிய விதத்தில் பல்வேறு துறை சார்ந்த பெரியார்களை அவ்வப்போது வரவழைத்து சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் என்பவற்றையும் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமே.

அறிவுப் பசியைப் போக்கும் அதே நேரம் வருடாவருடம் உயர்தர வகுப்புக்குள் பிரவேசிக்கும் மாணவர்களுக்கு தேநீர் விருந்து கொடுத்து வரவேற்கும் நிகழ்வையும், உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விருந்துபசாரம் கொடுத்து வழியனுப்பும் நிகழ்வையும் நல்ல முறையில் செய்து வருகின்றது.

இவ்வாறு மன்றம் செயற்பட்டு வருவதற்கு அதிபரின் பூரண ஒத்தாசையும், உயர்தர வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பங் களிப்பும் பொறுப்பாசிரியர்களின் ஊக்குவிப்பும் என்றும் உறுதுணை யாகின்றன. இந்நிலையில் மன்றத் தலைவர் அவர்களுக்கு ஒத்தாசையாகவுள்ள நிர்வாகக் குழு உறுப்பினர்களின் அயராத பணி போற்றுதற்குரியது. அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இத்தகைய செயற்பாடுகளைச் செய்து மாணவரை ஊக்கு வித்து வரும் மன்றம் மென்மேலும் பல வளர்ச்சிப் பாதைகளைக் கடந்து பல புதுமைகளைப் படைக்க வேண்டும் எனவும், அவர் களுக்கு வித்தக விநாயகர் என்றும் அருள் பாலிக்க வேண்டும் எனவும் வேண்டுகின்றேன்.

**திரு. க. சேய்ந்தன்**
பொறுப்பாசிரியர்,
உயர்தர மாணவர் மன்றம்,
இந்துக் கல்லூரி,
கொழும்பு-04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றியத் தலைவரின் மனதிலிருந்து...

இந்துவின் மைந்தர்கள் நாம், **"வருடாந்த ஒன்றுகூடலினை"** கடந்த பத்து வருடங்களுக்குப் பின் உங்கள் முன் படைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இவ்விழா உங்களையும் எங்களையும் இணைக்கின்ற ஓர் உன்னத ஊடகமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எம் ஒன்றியத்தாரின் அயராத உழைப்பினாலேயே இவ்விழாவினை உங்கள் முன்னிலையில் இன்று படைக்க முடிகிறது என்பதை இத்தருணத்தில் நான் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். இவர்கள் மட்டுமன்றி அதிபர், உபஅதிபர், எமது ஒன்றியப் பொறுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள், உயர்தர மாணவர்கள் ஆகிய அனைவரதும் முயற்சியினாலேயே நாம் மிக நீண்ட காலத்திற்குப் பின் **"வருடாந்த ஒன்றுகூடல் - 2002"** இனை உங்கள் முன் அரங்கேற்றுகின்றோம்.

கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியம் கொண்டாடும் வருடாந்த ஒன்றுகூடலில் வெளியிடும் **"சிகரம்"** காத்திரமான படைப்புக்களைத் தாங்கி வருதலையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இக்கலைச் சோலையிலே உள்ள மாணவ மரங்களை, செடிகளை பூக்கத்தக்கனவாக அமைக்கும் நோக்கில் நாம் எடுக்கும் முயற்சி தொடர்ந்து எமது பாடசாலை உயர்தர மாணவர் ஒன்றியத்தால் எடுத்துச் செல்லப்படும் என்பதில் சந்தேகமில்லை.

எமது பாடசாலை வரலாற்றில் மிக நீண்ட காலத்திற்குப் பின் இம்முயற்சியை நாம் எடுத்திருப்பதனால் அதில் இருக்கக் கூடிய குறைகளை மன்னித்து அருளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.



**பஞ்சாட்சரம் சங்கர்**
தலைவர்,
உயர்தர மாணவர் ஒன்றியம்,
இந்துக் கல்லூரி,
கொழும்பு-04

## செயலாளரின் இதயம் செப்புகிறது...


இந்து எனும் உன்னத சேஷ்திரம் மங்காப் புகழுடன் 52 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதன் சுவடுகள் கலை, கலாசாரம், பண்பாடு என்னும் முக்கண் கொண்டு வைரவிழாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இவ்வேளையில் கல்லூரியின் மன்றங்களுள் பெரும் எண்ணிக்கையான அங்கத்தவர்களை உள்ளடக்கிய உயர்தர மாணவர் ஒன்றியமானது மிக நீண்ட இடைவெளியின் பின்னர் வருடாந்த ஒன்றுகூடலினைக் கொண்டாடுவதையிட்டு மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் பெருமிதம் கொள்கின்றேன்.

இந்நிகழ்வானது மாணவரிடையே வேற்றுமைகளை நீக்குவதோடு உயர்தர மாணவர்களின் ஆளுமைகளை வெளிப்படுத்தவும் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். மாணவர்களின் பல நினைவலைகளையும், ஏக்கங்களையும் உருவாக்கிவிட்ட பள்ளிப் பருவத்தின் இறுதிக் கட்டத்தில் இந்நிகழ்வு நடைபெறுவதானது மாணவர்களின் மனங்களை திருப்திப்படுத்தி இதர நண்பர்களுடன் இணைவதற்கு ஒரு களமாகவும் அமையவுள்ளது.

இத்தினத்தில் நாம் வெளியிடவுள்ள இதழான **"சிகரம்"** ஆனது பல ஆக்கங்களைத் தாங்கி வருவதோடு அனுசரணையாளர்களையும் நினைவுகூறும் அதேவேளை இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர் பிறிதொரு பருவத்தில் உயர்தர மாணவப் பருவத்தை நினைவு கூறவும் **"சிகரம்"** உதவும் என நம்புகிறேன்.

இந்த நிகழ்வு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற வித்தக விநாயகரை வேண்டி நிற்பதோடு இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் உங்கள் அனைவரது ஆதரவையும் வேண்டி நிற்கின்றாம்.



**கணேசலிங்கம் உமாசங்கர்**
செயலாளர்,
உயர்தர மாணவர் உன்றியம்,
இந்துக் கல்லூரி,
கொழும்பு-04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழோவியரின் இதயத் துளிகள்

பாடசாலைப் பருவத்தின் இறுதிக் கட்டமான உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் நாம், பாடசாலையின் நினைவலைகளை மீட்டிப் பார்ப்பதற்கு ஓர் அரிய வாய்ப்பாக அமையும் வருடாந்த ஒன்று கூடலினை உங்கள் முன் பெருமை பொங்கிட அரங் கேற்றுவதில் நாம் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம். பாடசா லையிலே எல்லா மாணவர்களும், தமது திறமைகளை வெளிக் கொணர முத்தமிழ் விழா, கலைவிழா போன்ற பல விழாக்கள் உறுதுணையாக அமைந்தபோதிலும் குறிப்பாக உயர்தர மாணவர் களுக்கென நிகழ்வொன்று எமது பாடசாலையில் நடை பெறாமலிருந்தமை எம் உள்ளங்களை வருத்தியபோதும் எம் சகோதரர்களால் இத்தகையதொரு நிகழ்ச்சி கடந்த பத்து வருடங் களுக்கு முன்னர் நடாத்தப்பட்டது என்பதனை அறிந்தபோது அவர்கள் விட்டதை நாம் தொட்டுச் செல்ல வேண்டும் என்ற உத்வேகம் எம் மனதில் எழுந்தது. அதன் பிரதிபலிப்பாக இன்று நாம் **"வருடாந்த ஒன்றுகூடல் - 2002"** இனை உங்கள் முன் பரிணமிக்கின்றோம்.

கடந்த ஒரு தசாப்த காலமாக நடைபெறாதிருந்த இந்நிகழ்வினை மீண்டும் மலரச் செய்த பெருமை உயர்தர மாணவர் ஒன்றிய நிர்வாக் குழு 2002 இனையே சாரும். இந்நிகழ்வானது எமது பாடசாலை மாணவர்களின் கலைப் படைப்புக்களை, திறமைகளை உங்களுக்கு தெரியப்படுத்துவதுடன் அவர்களுடன் நட்பு பாராட்ட ஒரு பாலமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

உயர்தர மாணவர்களின் கலைத் திறமைகளை வெளிக் காட்டியதுடனன்றி அவர்களுக்கு இருக்கும் எழுத்தாற்றலை அச்சில் வடித்துக் காட்டும் முகமாக **"சிகரம்"** இதழினை வெளியிடுவதில் நாம் பெருமிதமும், பேருவகையும் எய்துகின்றோம். இந்நூலின் கண்ணே எமது இந்துவின் மைந்தர்களது கைவண்ணம் சொற்சித்திர மாகத் தீட்டப்பட்டுள்ளன. அவை அவர்களின் திறமைக்கு தக்க சான்றாகின்றன.

உங்கள் மலர்க் கரங்களிலே தவழ்கின்ற **"சிகரம்"** உயர்தர ஒன்றிய ஒன்றுகூடலுக்கு மணிமகுடம் சூட்டும் வகையிலே அமையும் என எண்ணுகிறேன். இந்நிகழ்வில் வெளிவரும் **"சிகரம்"** வனப்பும், வன்மையும் மிக்க வகையில் புதுப்பொலிவுடன் அமையும் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. இந்துவின் இளைய தலைமுறையினர் வெளியிடும் இம்மலர் வெறுமனே விளம்பர மலராகவன்றி அறிவியல் பொக்கிஷங்களாக மிளிரும் என்பது திண்ணம்.

கல்வி என்பது வெறும் புத்தகக் கட்டுக்குள்ளே சில எழுத்து வடிவங்கள் மட்டுமன்றி ஒவ்வொரு மாணவனதும் ஆளுமை அபிவிருத்தியிலும், திறமைகளைக் கண்ணுற்று வெளிக் கொணர் வதிலும் தங்கியிள்ளது என்ற எண்ணம் கொண்ட இளம் உள்ளங்கள் நாம் ஏற்றி வைக்கும் **"வருடாந்த ஒன்றுகூடல்"** எனும் சுடரிலும் சுடரின் கிரணக் கற்றைகளால் இவ்விதழிலும் உள்ள குற்றங் குறைகளைத் தவிர்த்து மன்னிக்குமாறு அறிவுப் பெருந் தகைகளை வேண்டிக் கொள்கின்றோம்.

**ராஜரட்ணம் ருக்ஷான்**
இதழாசிரியர்,
உயர்தர மாணவர் ஒன்றியம்,
இந்துக் கல்லூரி,
கொழும்பு-04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர மாணவர் ஒன்றிய நிர்வாகக் குழு - 2002

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | த. முத்துக்குமாரசாமி |
| பொறுப்பாசிரியர் | : | க. சேய்ந்தன் |
| தலைவர் | : | ப. சங்கர் |
| உபதலைவர் | : | பா. சபேசன் |
| செயலாளர் | : | க. உமாசங்கர் |
| உபசெயலாளர் | : | சி. மிதிலன் |
| பொருளாளர் | : | பெ. ஜெனிவன் |
| பத்திராதிபர் | : | ரா. ருக்ஷான் |
| உபபத்திராதிபர் | : | க. சயந்தன் |

## பிரிவுப் பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| கணிதம் | : | யோ. சஞ்சீர் |
| வர்த்தகம் | : | சி. டினேஷ்குமார் |
| கலை | : | கி. திவாகரன் |
| உயிரியல் | : | ரா. காணரூபன் |
| மாணவத் தலைவர் | : | இ. நகுலன் |

உயர்தர மாணவர் ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் - 2002



அமர்ந்திருப்பவர்கள் (இ-வ):- க. உமாசங்கர் (செயலாளர்), க. சேய்ந்தன் (பொறுப்பாசிரியர்), ப. சங்கர் (தலைவர்), த. முத்துக்குமாரசாமி (அதிபர்), பா. சபேசன் (உபதலைவர்), பெ. ஜெனிவன் (பொருளாளர்)
நிற்பவர்கள் (இ-வ):- ரா. ருக்ஷான் (பத்திராதிபர்), கி. திவாகரன், சி. மிதிலன் (உபசெயலாளர்), சி. டினேஷ்குமார், க. சயந்தன் (உபபத்திராதிபர்), இ. நகுலன், ரா. காணரூபன்
சமுகமளிக்காதவர்:- யோ. சஞ்சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரங்களை நோக்கி ....

நாங்கள் நதிகளல்ல
உயரத்திலிருந்து பள்ளம் தேடி
பாதை மாறிச் செல்பவர் அல்ல!

மழையுமல்ல
தடாலடியாக மண்மீது விழுந்து
நிறம் மாறமாட்டோம்!

நாங்கள் நாங்களேதான்
உயரங்களை நோக்கிச்
செல்பவர்கள்!
சிகரங்களைத் தொடுவதற்குப்
பிறந்தவர்கள்!

பல்வேறு இடங்களிற் பிறந்தாலும்
பாடசாலையில் ஒன்றானோம்
பழகிப் பிரிவது நட்பென்ற
பழையதை மாற்றப்
புறப்பட்டோம்!
இறுதிவரை இந்த நட்பு
இறுக்கமாகவும் இருக்கும்!
இனிமையாகவும் இருக்கும்!

அனுபவிக்க இளமை!
அரட்டையடிக்க வகுப்பு!
ஆடித்திரிய வீதிகள்!
ஓடிப்படிக்க டியூட்டரி
என்றாலும் - நாங்கள்
சிகரங்களைத் தொடுவதற்குப்
பிறந்தவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றது கைம்மண்
கல்லாதது உலகு - இதனால்
கற்கிறோம்! கற்கிறோம்!
A/L இற்கும்தான்
எங்கள் எதிர்காலத்திற்கும்தான்

A/L இல் 3A மட்டுமல்ல,
எதிர்காலத்தில் எல்லாம் A ஆகவும்
எம்மை ஏற்புடையவராக்குகின்றோம்!
நாங்கள் - சிகரங்களைத் தொடுவதற்கு
பிறந்தவர்கள்!

இந்துவின் மைந்தன்
இளைத்தவன் அல்லன்!
ஆரியக் கூத்தாடினாலும்
அவன் தன் காரியத்தில்
அசராதவன்!
அதனால்தான் - நாங்கள்
சிகரங்களைத் தொடுவதற்குப்
பிறந்தவர்கள்!

எங்கே எங்கள் சிகரங்கள்?
தொட்டு வந்தவை கிடக்கட்டும்
தொட இருக்கும் சிகரங்கள் எங்கே?
நாங்கள் ஏறிக் கொண்டே இருக்கிறோம்
சிகரங்களை நோக்கி ..........

ஆக்கம்:-
**A. R. தவமயூரன்**
வர்த்தகப் பிரிவு (2003)


உயர்தர மாணவர் மன்றம்
நடாத்தும்
**"வருடாந்த ஒன்றுகூடல்"**
சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறோம்



"சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி"
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்** ஜே.பி.
(அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி)


**751/A, புளுமண்டோல் வீதி,**
**கொழும்பு-15.**
**Tel: 072-422239 Fax: 527025**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best wishes*


*from:*



# *Mr. M.R. Fahumudeen*

**TEACHER IN CHEMISTRY**

*With best compliments*



*from:*

# *S. Panchatcharam*

**(Old Student)**

*With best compliments from*

our mission your success

**SAI BRIGHT COMPUTERS (PVT) LTD.**

**535, 1/2 GALLE ROAD, COLOMBO-06, SRI LANKA.**

Hotline : 0777316045, 072955056 Tel/Fax 559822

E-mail : saibrights@sltnet.lk, saibrights@yahoo.com

www.saibrights.com

| OUR SERVICES..... | | SPECIAL COURSES |
|---|---|---|
| SOFTWARE ENGINEERING DIVISION | HARDWARE ENGINEERING DIVISION | MS Office 97/2000/XP |
| | | Visual Basic, C++, Java, Pascal, Oracle, Sql |
| | | Multimedia Packages |
| | | Bit, Electronics, |
| * Software Engineering Division | * Hardware Engineering Division | Diploma in Web Designing |
| * Software Developing | * Computer & Accessories | Auto Cad & Engineering Drawings |
| * Web Page Designing | * Maintenance & Repairing | Diploma in Computer Hardware Engineering |
| * Graphic Designing | * Installing & Upgrading | Diploma in Computer Software Engineering |
| * Computer Training | * Computer for rent | SEMESTER COURSES |
| * Kids Training | * Used computers & Parts | Diploma in Computer Science |
| * Type Setting | * CD copying & VHS to CD | Mastering Visual Basic |
| * Printing & Scanning | * Software CD's | Mastering C++ |
| * Net2Phone | * Networking | Mastering Java |
| * Software Consulting | * Internet Connections | International Masters Diploma in Computer Hardware/Software Engineering |

**URGENT BREAKDOWNS & REPAIRS PLEASE CONTACT : 072 955056, 0777 316045**

**KINGDOM OF IT SOLUTIONS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*


# Western Jewellers

Jewellers & Gem Merchants

88, Sea Street, Colombo 11.
Tel: 433977, 335682

விழா இனிதே நிறைவேற

**எங்கள் மண்ணின் விதைகளும், விழுதுகளும் நீங்களே! நல்வாழ்த்துக்கள்!**



குமாரசாமி
**கலைச்செல்வன்**
ஆசிரியர் - கணக்கீடு

# உயர்தர மாணவன் ஒருநோக்கு

பிறந்தவுடன் மழலை, வளர்கையிலே பாலகன், பள்ளி செல்கையிலே மாணவன் என்று நகரும் மனித வாழ்க்கை பதினெட்டாவது பருவத்திலே பொதுவாக வாலிபப் பருவத்தை தொட்டு நிற்கின்றது.

இந்த வாழ்க்கையின் பிற்காலத்தை நிர்ணயிக்கும் தீர்க்கதரிசன பருவமாக விளங்குவது மாணவப்பருவம் என்றால் மிகையாகாது. வாழ்க்கையின் எதிர்காலமானது சிறப்பாகப் பரிணமிக்க வளமான கல்வியைக் கொண்டு பாலகனைப் பண்படுத்துவது பள்ளிப் பருவம் என்பது உலகம் வாழும் வரை உண்மையான கூற்று.

பள்ளிப்பருவம் ஆரம்பக் கட்டங்களில் சுகமான பருவம்தான். இருப்பினும் அது காலம் செல்லச் செல்ல பல சிக்கல்களையும் சமூக மாற்ற சூழ்நிலைகளையும் உருவாக்கும் என்ற தவறான எண்ணக் கருக்களை மாணவர்கள் தம்முள்ளே வளர்த்துக் கொள்வதாலோ என்னவோ, சில மாணவர்கள் தமது கல்வியை இடைநடுவே நிறுத்தி கல்விப் பாதையில் விலகிச் செல்லும் சம்பவங்களும் நம் மாணவர் சமுதாயத்திடையே பரவலாகக் காணப்படுகிறது.

இருப்பினும் க. பொ. த சாதாரண தரம் வரை சீரான வழியில் சென்று க. பொ. த உயர்தரத்தை தொடுகின்றபோது ஒரு மாணவனானவன் சமூகத்தின் பார்வைக்குள் நுழைகின்றான். உயர்தர மாணவனது நடத்தை, போக்கு, கல்வி என்பன சமூகத் தின் கண்களுக்குள் நுழைகின்றன எனலாம்.

உயர்தர மாணவன் ஒருவன் பாடசாலையில் பயிலும் வரையில் பல கடமைகளுக்கு ஆளாகின்றான். கல்வி, கல்லூரிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கம் செலுத்தல், மன்றங்களில் விளையாட்டுக்களில் தமது ஆளுமையை வெளிப்படுத்துவதோடு மட்டுமன்றி கல்லூரியின் பெயரை வெளி இடங்களில் பிரதிநிதித்துவப்படுத்துவது போன்ற பல கடமைகளைச் செய்ய வேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது.

உயர்தர மாணவனானவன் தன்னுடைய கல்விப் பருவத்தில் மனதை ஒரு நிலைப்படுத்தி சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப தன்னையும் மாற்றிக் கொள்ள முன்வர வேண்டும். இல்லையேல் அவன் எதிர்காலத்தில் ஒரு ஆளுமையற்றவனாக தன்னால் தனித்து எந்தவொரு நிகழ்ச்சிகளையும் நடாத்த முடியாமல் பிறரையே தங்கியிருப்பவனாகக் காணப்படுவான். மனிதனுடைய ஆளுமைகள் திறமைகளை வெளிக்கொணர களம் அமைப்பது உயர்தர மாணவப்பருவம் என்றால் மிகையாகாது.

உயர்தர மாணவர்கள் கல்வி எனும் கருவை ஏன், ஏதற்கு, என்று விடை காண முடியாமல் கற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். சிலர் கல்வி என்னும் கருவை ஒரு பொழுதுபோக்காக்க முயல்கின்றார்கள். சிலரோ வெறுமனே கல்வியை ஏட்டுச்சுரைக்காய் போன்று கற்றுவிட்டு பரீட்சையை எழுதிவிட்டு பட்டப்படிப்புக்கு செல்லலாம் என்று எண்ணுகிறார்கள். சிலரோ "தொண்டு காலமாய்த் திணித்த திணிப்பை மூன்று மணி நேரத்தில் அவசரமாய் வாந்தியெடுக்கச் செய்வது அநியாயம் என்று தேர்வையும் நமது கல்வி முறை எதிர்காலத்தைக்கூட இறந்தகாலமாக்கிவிடும் என்று நினைத்து உயர்தரம் படிக்கையிலேயே திசைமாறுகின்றனர்.

அடுத்து கல்லூரிகளில் ஆதிக்கம் செலுத்தல் என்னும்போது உயர்தர மாணவன் ஒருவன் பிறிதொரு மாணவனுக்கு முன்னுதாரணமாக இருத்தல் வேண்டும். உயர்தர மாணவனுடைய ஒழுக்கம், கல்லூரியின் மேல் அவனுக்குள்ள பற்று, கல்லூரி நிகழ்வுகளில் முன்னின்று செயற்படுதல் என்று தன்னை ஏனைய மாணவர்களுக்கு ஓர் உதாரணபுருஷராக்க முயலவேண்டும்.

மன்றங்கள், விளையாட்டுக்கள் எனும் போது மன்றங்கள் தான் ஒரு மாணவனுடைய ஆளுமையை வெளிப்படுத்துவன என்றால் மிகையாகாது. அதேபோன்று பாடசாலையின் பிரதான விளையாட்டு அணிகளில் பெரும்பாலும் உயர்தர மாணவர்களே காணப்படுகிறார்கள். எனவே விளையாட்டுக்களில் பங்குபற்றி தம்மிடையேயும் பிற அணிகளிடையேயும் ஒரு மட்டற்ற தோழமையைப் பேணுவதன் மூலம் பாடசாலை வாயிலாகவும் நட்பினை வளர்க்க முடியும். மன்றங்களில் செயற்குழு உறுப்பினர்களாகவோ அல்லது விளையாட்டுக்களில் அணிவீரர்களாகவோ தம்மை மிளிரச் செய்வதன் மூலம் எதிர்கால வாழ்க்கையிலும் தமது ஆளுமைகளை வெளிப்படுத்த முடியும்.

சில மாணவர்கள் கல்லூரிக்காக பிறிதொரு கல்லூரியிலே தம்மை பிரதிநிதிப்படுத்தும் போது தம் கல்லூரியின் கௌரவத்தையும் குறிப்பிட்ட கல்லூரியின் கௌரவத்தையும் சிறந்த முறையில் வெளிப்படுத்த வேண்டும். கல்லூரியின் கௌரவம் எனும் போது கல்லூரிச் சீருடையுடன் கல்லூரிப்பட்டி அணிந்து அல்லது கலாசார நிகழ்வுகளெனின் கலாசார உடையில் சமுகமளித்து கல்லூரிக்கென்று பெயரையும் புகழையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதனை உயர்தர மாணவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

உயர்தரப் பருவம் பொன்னான பருவம். அப்பருவம் உங்களை நல்வழிக்கு இட்டுச் செல்லும்.

"இலையின் துளிர்ச்சி நுனியின் வளர்ச்சி
விதையின் வீழ்ச்சி விருட்சத்தின் வளர்ச்சி
வீழ்வதும் பின்னர் எழுவதும் இயற்கையின் நியதி"

மாணவர்களே தவறான பாதையில் வீழ்ந்திருப்பின் நாங்கள் உயர்தர மாணவர்கள் என்ற எண்ணக் கருவை மனதில் விதைத்து சீரிய பாதையை நோக்கி நகருங்கள்.

*வெற்றி உங்கள் பின்னால்!*



ஆக்கம்:-
**கணேசலிங்கம் உமாசங்கர்**
வர்த்தகப் பிரிவு (2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With best compliments from:*



## T.V. Kumarasen

6/1-2/2, DR. E.A. COORAY MAWATHA,
WELLAWATHA, COLOMBO-06.
TEL: 074-515340

*With best compliments*



## COLOMBO TELECOM

**GOVI: 077-349705 NIHAL: 077-313518**

Cellular Phone Service

Dealers in Cellur Phones, Batteries, Leather Cases, Fast Chargers, S'ow Chargers, Car Chargers, Car Holders, Key Pads, Door (flaps) Complete Hand Free, Car Kit, Dialoge Gsm, Celltel, Mobotel & Hutchison Connection Cellular Phone Repairs Land Phones & Undertaken Repairing With Equipment And Parts

*Wholesale & Retail Dealers In Phone Accessories*

ANYTHING & EVERYTHINGS FOR MOBILE PHONE

**136/J, Shams Market, Keyzer Street, Colombo 11.**

Hotline: 380375 E-mail: sudath@griot.net Fax: 380375

*With best compliments from:*

## E.S.P. & Co.

*General Merchants, Commission Agents, Importers, Exporters & Transporters*

**124, Old Moor Street, Colombo 12, Sri Lanka.**

Tel: 431515, 436794

வாழ்த்துக்கள்

## A/L Accounting

வகுப்புக்கள் தற்பொழுது நடைபெறுகின்றன.

ஆசிரியர்


**V. குமார் B.B.A**

**24, I.B.C. Road, Colombo-06.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*

*from:*



*Wellawatta*

**Nithyakalani Jewellery**

(Estb: 1978)

**Manufacturers & Exporters of Gems & Jewellery**

**230, Galle Road, Colombo-06, Sri Lanka.**

**Tel: 363392 Fax: 94-1-504933, 585944**

**E-mail: nithkal@slt.lk http: //www.nithyakalyani.com**

# இந்துவெனும் உன்னத சேஷ்திரம்

இமயம் எமையண்டி இடிந்து வீழ்ந்தாலும்,
உயர் குருதியுறைந்தாலும்,
வைகறைகள் இருண்டாலும்
பொய்கை வரண்டு பொய்த்துப் போனாலும்,
மேனி ரோமங்களேனும் - இந்துவென்றுரைக்கும்

உயிர் காதலுறவோடு
கனாக் கண்டு கழித்தாலும்,
மழலை மதுரக் குரலிசைக்காவிடினும்,
செவிகள் செயலிழந்தாலும்,
உள்ளத்து உன் நெஞ்சம் - இந்து புகழ்பாடும்

மாதர் மாயத்திடை
மதி மலிந்து கிடந்தாலும்,
கயவனென் றெம்மைக் காசி தடுத்தாலும்,
வாழ்வுச் சுழி எம்மை வீசியடித்தாலும்
இந்து இட்ட - தீ
எரித்தெம்மை புனிதராக்கும்.


நாடி தளர்ந்தாடி - தள்ளாடி
தாடி நரையேறி,
உயிர்க் கலங்கள் புரையோடி,
இறைவனடி நாடும்
இறுதி நொடிகளும் - இந்துவென்றுரைக்கும்.

ஆத்மீக இறையலையும்
அறிவியல் பேரலையும்
பரிவுறும் சந்தமினி - இந்துவென்றுரைக்கும்
இந்துவென்றுரைக்கும் ...... இந்துவென்றுரைக்கும்

ஆக்கம்:-
இந்து மைந்தன்
ஸ்ரீ கிருபானந்த்
கணிதப் பிரிவு (2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*



**DEELAH**

**COMMUNICATION (PVT) LTD.**

IDD & Local calls, Fax, Photocopy, binding,
Lamination, Stationary & Net-2 Phone
"Overseas Connecting Call Facilities"

**385, A1, GALLE ROAD,**
**COLOMBO - 06**
*Tel. 075-514274, 075-514275*
*Fax : 94-1-503515*
*E-mail : deelah9@yahoo.com*

# பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிதலுக்கு உதவும் நியமப் புள்ளி ('Z" Score) முறை

இலங்கையில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையானது மேற்படிப்பைத் தொடரக்கூடியதும் பல்கலைக்கழக அனுமதிக் கானதும் போட்டிப் பரீட்சையாகவும் விளங்குகின்றது. பல்கலைக்கழக அனுமதியைப் பெற மாணவர்கள் தேசிய ரீதியாகவோ மாவட்ட ரீதியாகவோ தனிப்பட்ட முறையில் உயர் புள்ளிகளைப் பெற வேண்டியது அவசியமாகின்றது. இலங்கையில் பல்கலைக்கழகங் களுக்கு மாணவர்களைத் தெரிதலுக்கு இதுவரை பல்வேறு வகை யான முறைகள் கையாளப்பட்டு வந்துள்ளன. எனினும் இத்தகைய முறைகள் உகந்த முறைகளல்ல எனக் கல்வியியலாளர்களால் முன்மொழியப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பெயரில் 'Z' புள்ளி முறை தற்போது அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிதலுக்கு இலங்கையில், ஆரம்ப காலகட்டங்களில் மொத்த புள்ளி அடிப் படையிலான முறையே கையாளப்பட்டது. அதாவது மாணவன் ஒருவன் நான்கு பாடங்களிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் அவன் பல்கலைக்கழகத்தினுள் உள்வாங்கப்பட்டான். இம்முறையினால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு பல்கலைக்கழகத் தெரிவு முறையாக சராசரி முறை அறிமுகஞ் செய்யப்பட்டது. இம்முறையானது குறிப்பிட்ட மாணவனது மொத்தப் புள்ளி கணிக்கப்பட்டு அதிலிருந்து பெறப்பட்ட சராசரியே கவனத்திற் கொள்ளப்பட்டது. ஆயினும், இம்முறையிலும் குறைபாடுகள் உள்ளதாக கல்வியியலாளர்கள் விமர்சனம் தெரிவித்தனர். 2001ஆம் ஆண்டு 'Z' புள்ளி முறை மேலதிக திருத்தமாக அறிமுகஞ் செய்யப்பட்டது.

'Z' புள்ளி முறை தொடர்பான விமர்சனங்கள் இன்று மேலாதிக்கம் செலுத்துகின்ற போது உயர்தரம் கற்கும் மாணவர்கள் அனைவரும் இம்முறை பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். 'Z' புள்ளி முறை பற்றிய தெளிவான விளக்கம் இன்று கல்வியியலாளர்கள் மத்தியிலேயே காணப்படாமை உயர்தர மாணவர்களைப் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். 'Z' புள்ளியைக் கணிக்கும் முறை பற்றி இன்று அறிவூட்டல்கள் பல இடங்களில் நடைபெற்றபோதும் அதற்குரிய சரியான பின்புலம் தெளிவானதாக இல்லாமை குறிப்பிடத்தக்கது.

**'Z'** புள்ளி கணிக்கும் முறையை நாம் ஒரு பாடத்தினை உதாரணமாகக் கொண்டு விளங்குதல் எமக்குத் தெளிவைத் தரும். ஏனெனில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே **'Z'** புள்ளி கணிக்கப்பட்டு அதன் பின்பே மூன்று பாடங்களினதும் **'Z'** புள்ளி கணிக்கப்படுகிறது. நாம் பௌதீகவியல் பாடத்தில் மாண வர்கள் பெற்ற புள்ளிகளைக் கொண்டு **'Z'** புள்ளி கணிக்கும் முறையை அறிந்து கொள்வோம்.

பௌதீகவியலில் இலங்கையில் தோற்றிய 9000 மாணவர்கள் பெற்ற புள்ளிகளது பரம்பல் பின்வருமாறு:

| வகுப்பாயிடை புள்ளி | 1-10 | 11-20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61-70 | 71-80 | 81-90 | 91-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 1200 | 1300 | 1800 | 2000 | 900 | 600 | 400 | 400 | 300 | 100 |

இப்பரம்பல் முறையைக் கொண்டு **'Z'** புள்ளி கணிக்கும் முறையை அறிவதற்கு முன், அப்பரம்பலை விரிவான முறையில் அறிதல் எமக்குத் தெளிவைத் தரும்.

| வகுப்பாயிடை | மீடிறன் f | நடுப்புள்ளி x | விலகல் $d=\frac{x-A}{c}$ | Fd | $Fd^2$ |
|---|---|---|---|---|---|
| 1–10 | 1200 | 5.5 | –3 | –3600 | 10800 |
| 11–20 | 1300 | 15.5 | –2 | –2600 | 5200 |
| 21–30 | 1800 | 25.5 | –1 | –1800 | 1800 |
| 31–40 | 2000 | 35.5 | 0 | 0 | 0 |
| 41–50 | 900 | 45.5 | +1 | +900 | 900 |
| 51–60 | 600 | 55.5 | +2 | +1200 | 2400 |
| 61–70 | 400 | 65.5 | +3 | +1200 | 3600 |
| 71–80 | 400 | 75.5 | +4 | +1600 | 6400 |
| 81–90 | 300 | 85.5 | +5 | +1500 | 7500 |
| 91–100 | 100 | 95.5 | +6 | +600 | 3600 |
| | **9000** | | | **-1000** | **42,200** |

இவ்வட்டவணையைக் கொண்டு நாம் **'Z'** புள்ளியைக் கணிப்பதற்கு மூன்று பெறுமானங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். அவை:-

1. மாணவனது புள்ளி (x)
2. இடை $(\bar{x})$
3. நியமவிலகல் $(\sigma)$

என்பவையாகும். இம்மூன்று எண் பெறுமானங்களையும் அறிந்து கொண்டோமாயின் **'Z'** புள்ளியைக் கணிப்பிட முடியும். அதாவது மாணவனது புள்ளி, இடை, நியமவிலகல் என்பவற்றைத் தனித்தனியே கண்டு அவற்றைக் கீழ்வரும் சூத்திரத்தில் பிரதியீடு செய்வதன் மூலம் **'Z'** புள்ளியைக் கணிப்பிட இலகுவாயிருக்கும்.

$$Z_{score} = \frac{x-\bar{x}}{\sigma}$$

முன்னர் நாம் கண்ட அட்டவணையின்படி இடை, நியமவிலகல் என்பவற்றைக் கணிப்பிடுவோம். இடையைக் கீழ்வரும் முறையிலே கணிப்பிடலாம்.

$$\bar{x} = A + C\frac{\sum fd}{\sum f}$$

இதனடிப்படையில் இடையைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$= 35.5 + 10 \times -\frac{1000}{9000}$$

$$= 35.5 - 1.11$$

$$= 34.39$$

$\underline{\Omega}$ 34.4

இடையைக் கணிப்பிட நாம் நியமவிலகலைக் காண வேண்டும். அதற்குக் கீழ்வரும் சூத்திரம் உதவும்.

$$6 = C\sqrt{\frac{\sum fd^2}{\sum f} - \left(\frac{\sum fd^2}{\sum f}\right)^2}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சூத்திரத்தின் உதவியுடன் நியமவிலகலைப் பின்வரும் முறையிற் கணிப்பிடலாம்.

$$= 10\sqrt{\frac{42200}{9000} - \left(-\frac{1000}{9000}\right)^2}$$

$$= 21.6$$

இடை, நியமவிலகல் என்பவற்றைக் கணிப்பிட்ட பின் மாண வன் ஒருவனது பௌதீகவியல் பாடத்தின் புள்ளியைப் பெறுவதன் மூலம் 'Z' புள்ளியைக் கணிப்பிட முடியும். உதாரணமாக பௌதீகவியலில் ஒருவன் 65 புள்ளியைப் பெற்றிருந்தால் அவனது 'Z' புள்ளி பின்வருமாறு கணிக்கப்படும்.

$$Z_{score} = \frac{x - \bar{x}}{\sigma}$$

$$= \frac{65 - 34.4}{21.6}$$

$$= \frac{30.6}{21.6}$$

$$= 1.4166$$

x - மாணவனது புள்ளி (65)

$\bar{x}$ - இடை (34.4)

σ - நியமவிலகல் (21.6)

'Z' புள்ளி இருவகைப் பெறுமானங்களைத் தருகிறது. ஒன்று நேர்ப்பெறுமானம், மற்றையது மறைப்பெறுமானம். நேர்ப்பெறுமான மானது இடைப் புள்ளியைவிட, மூலப்புள்ளி அதிகமாக இருக்கும்போது மட்டுமே பெறப்படும். மேலேகாட்டிய உதார ணத்தில் 'Z' புள்ளி நேர்ப்பெறுமானமேயாகும். ஆனால் இடைப் புள்ளியைவிட மூலப்புள்ளி குறைவாக இருந்தால் Zscore மறைப் பெறுமானமாகவே காணப்படும். மேலேகாட்டிய முறையில் மாணவன் ஒருவன் மூன்று பாடங்களுக்கும் பெற்ற புள்ளிகளுக்கான 'Z' புள்ளியைக் கணிப்பிட்டு, மூன்று 'Z' புள்ளியையும் கூட்டி மூன்றால் வகுக்கவரும் பெறுமானமே இறுதி 'Z' புள்ளியாகும்.

'Z' புள்ளி முறையானது மாணவர்களுக்கு நன்மை பயக்கும் அதேவேளை சில தீமைகளையும் தருகிறது என்பது மறுக்க முடியாததாகும்.

எல்லாப் பாடங்களினதும் பரீட்சை வினாத்தாள்களின் கடினத் தன்மை ஒத்தவையல்ல. எனவே சில மாணவர்கள் தோற்றிய பாடங்களின் காரணமாக அவர்கள் இலகுவில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியும். உதாரணமாக கடந்த பல வருடங்களில் அவதானிக்கபட்ட தரவுகளின்படி இஸ்லாம், இந்துசமயம், பௌத்தசமயம், கிறிஸ்தவசமயம், இஸ்லாமிய நாகரிகம், இந்து நாகரிகம், பௌத்த நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம் போன்ற மத சம்பந்தமான பாடங்களுக்கும் பிற மொழிகளான பாளி, அரபு போன்ற பாடங்களுக்கும் தோற்றுவோர் கூடுதலான புள்ளியைப் பெற்று இலகுவில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். ஆனால் 'Z' புள்ளி முறை அனைவருக்கும் சமவாய்ப்பினை வழங்குகின்றது.

'Z' புள்ளியானது உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு உதவுவதாகவுள்ளது. அதாவது பௌதீகவியலுக்குப் பதிலாக விவசாயத்திற்குத் தோற்றமுடியும். பௌதீகவியலுடன் ஒப்பிடும்போது விவசாயம் இலகுவான பாடப்பரப்பு ஆகும். இது மாணவர்களுக்கும் நன்மையையே பயக்கிறது.

2000 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையில் பல்கலைக்கழங்க ளுக்கு நுழைய விளைந்த மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களுக்கும் 2000 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய கல்வித்திட்டப்படி மூன்று பாடங்களுக்கும், பொதுப் பரீட்சை ஒன்றுக்கும் தோற்ற வேண்டும் என்பது நாமறிந்ததே. எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நான்கு பாடம் கற்ற மாணவனின் சராசரிப் புள்ளியை மூன்று பாடம் கற்ற மாணவனின் சராசரிப் புள்ளியுடன் ஒப்பிடுவது ஒரு தகுதி வாய்ந்த எடுகோளன்று. எனவே 'Z' புள்ளி முறையானது இரு தரப்பினருக்கும் சாதகமானதாகவே இருக்கிறது.

'Z' புள்ளி முறையில் நன்மைகள் காணப்படுவது போலவே தீமைகளும் காணப்படுகின்றன. 'Z' புள்ளி முறை அகில இலங்கை ரீதியாகவா அல்லது மாவட்ட ரீதியாகவா கணிக்கப் படுகிறது என்பதை அறிய முடியாதிருப்பது பாதகமான நிலையாகவே காணப்படுகிறது. 'Z' புள்ளி முறையில் விலகல் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெறப்படுதலைப் பொறுத்தவரையில் பரீட்சாத்திகள் பாதிக்கப்படுவதாகவே அமை கிறது.

'Z' புள்ளி முறையில் இலகுவான அல்லது எல்லோராலும் அதிக புள்ளி ஈட்டக் கூடிய பாடத்தில் ஒருவன் அதிக புள்ளி பெறு வானாக இருந்தாலும் அவனுக்கு அதில் முன்னேற்றம் ஏற்படாமை மாணவர்களைப் பாதிக்கிறது என்பது இம்முறைக்கு எதிராக முன் வைக்கப்படும் விமர்சனமாகும்.

எனவே, இன்றைய பல்கலைக்கழக அனுமதிக்கு கவனிக்கப்படும் 'Z' புள்ளியைப் பற்றி நீங்களும் நன்றாக அறிந்திருந்து உச்ச நியமப் புள்ளியைப் (Zscore) பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவீர்களாக.

ஆக்கம்:-
ரா. ருக்ஷான்
கலைப் பிரிவு (2003)



*With best compliments from:*

# Luckshmi Bhawan

HOTEL, GROCERIES, LODGING AND COMMUNICATION

*97, Olcott Mawatha,*
*Colombo-11, Sri Lanka.*
**Tel: 348261, 437252**

*With best compliments*

*from:*

# At Artline Traders

**Agents for AVALON Brand Photocopy Paper,**
**Dealers in all types of School, Office Stationery & Paper Merchants**
**Authorised Dealers for C.I.C. Consumer Products**


**27, First Cross Street, Colombo-11.**
**Tel: 433815, 458791 Fax: 441649**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Patsons Mobile Computer Repair Center

**OUR SERVICES**

- B rand new computers`
- U pgrading computers
- S pare parts & Peripheral
- T rouble Shooting
- N etworking
- M aintenances
- C D Writing
- S canning
- T ype Setting
- P rinting
- P rogramming, using Java, VB, C, C++
- H ardware / Network Administration Courses




Free Internet Connection

HOTLINE - 0777 707896, 0777 705012

*With best compliments from:*




## Ajantha Rest Inn & Ajantha Hotels Ltd.

LUXURY ROOMS AND FINE LODGING
COLOMBO-BATICALOA LUXURY BUS SERVICE
LOCAL CALLS & I.D.D. TELEPHONE SERVICE

125, OLCOTT MAWATHA,
COLOMBO-11, SRI LANKA.
*(OPPOSITE TO RAILWAY STATION)*

Tel: 328089, 332616, 332617


## Concentration building

Lack of concentration is the problem that plagues many students. Concentration is defined as a continuous and complete focus of the mind on the problem at hand. Complete concentration is said to happen, when all parts of the mind are cocussed on the subject. This also implies that there are no distractions and what is read is assimilated fast.

**Why is concentration important?**

Concentration results in

(1) Increased productivity of study. A two-hour concentrated study is equivalent to a ten-hour unfocussed study.

(2) High retention of knowledge.

(3) Increases the joy of study. This is very important. Many students do not understand that you cannot master something in which you are not interested. For example if you hate physics, there is no way you can concentrate. Conversely if you can concentrate, it implies that you are enjoying the subject.



Many experts associate the word 'Flow' with concentrarion. Flow here means that you are moving with the subject and you become one with it. When you are in flow, your mind does not distinguish between the subject and yourself. The subject becomes you. A good ecample of flow or concentration is cited in the *Mahabharata*. Dronacharya asks his students to concentrate on the eye of a crow and strike an arrow on the target. Dronacharya asked, "What do you see ?" Most of the students mentioned the tree and then the brandhes and then the crow and ultimately the eye of the crow. When the same question was put forth to Arjuna, he answered, "I don't see anything. I see only the eye." this is true concentration.

Studies fhow that when the mind is in complete focus or flow, it is working at its peak. The energy consumption is the lowest and the sfficiency is hte highest. Many people associate happiness with flow. You can now see the importance of concentration. Concentration as a skill depends on many factors. In fact some factors are so important that it is impossible to develop this skill unless the factors are operating as they should be. Some of the most important factors are:

**Good sleep** : This is the number one factor. Many studentswonder why they are not able to concentrate. If you have not had a good night's sleep, it is impossible to concentrate.

**Good diet** : Good diet mean nutritious food. Food is necessary not only for the body, but also for the brain.

**Exercise** : exercise is very important. This could mean playing games or walking or any other kind of physical activity.

Other factors are your timing of study, anxiety or stress, environment, etc. proper lighting is important. If you eyes are getting strained, you will not be able to concentrate. Ensure that you are sitting comfortably and the light os optimal. Sound distractions should be minimal. It if difficult to concentrate when you are in a noisy room.

First there listed factors contribute to the majority of reasons why students are unable to concentrate. If a reasons why students are unable to concentrate in spite following the above mentioned rules, meditation and yoga can help to a substantial edtent in building up this skill.

TERAANCE THERESION A DRIAN
BIO - SCIENCE (2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழா சிறப்புற
## உதவி புரிந்தோர்

V. Janagan
K. Naguleswaran

*With best wishes from:*

**T. Rajasooriyar**


(Rtd. District Engineer, Building Department
Director - Engineering

**T.R.J. Builder's (PTE) Limited.**
**Civil Engineers & Property Developers**

**78/1, Fusselles Lane,
Colombo-06, Sri Lanka.**

**T'Phone: 556495, 592403**

*With best wishes from:*




**B. BABU** B.Sc (Che.sp)

(Teacher in Chemistry)

Tel: 735016

*With best compliments from:*



**A. Kunasingam**

***(Teacher in Co - Maths)***

**YOUR CITADAL**

**Tel: 075-517357**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best wishes*

*from:*

## POOBALASINGAM BOOK DEPOT

309A-2/3, Galle Road,
Colombo-06.

Tel: 074-515775, 506766

**நீங்களும் ஒலிபரப்பாளராகுங்கள்**

இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் (Regd: W/A-38058)

**ஒலிபரப்பாளர் பயிற்சி நெறி**

* அறிவிப்பு
* தயாரிப்பு
* தொடர்பாடல்
* நிகழ்ச்சி அமைப்பு
* செய்தி வாசிப்பு
* செய்தி அறிக்கை தயாரிப்பு
* நேர்காணல்
* நேர்முக வர்ணனை
* மேடை நிகழ்ச்சித் தொகுப்பு

**உலகளாவிய ரீதியில் புகழ் பெற்ற அனுபவம் மிக்க ஒலிபரப்பாளர்கள் மூலம் உங்களுக்குக் கற்றுத்தரப்படும்.**

4.50 சதம் முத்திரை ஒட்டிய தபாலுறையை அனுப்பி விபரங்களைப் பெறலாம்.

**Tel: 074-512830 Mobil: 077-316258**

பயிற்சி நெறி
3 மாதம்

**M.M.I.C**

Mass Media Institute of Ceylon

2nd Floor, Colombo Plaza, (Adjoining Wellawatte Mosque)
50, Galle Road, Colombo-06.

*With best wishes*

*from:*



*M.G.M. Ishar*

*With best compliments from:*




**Mr. S. Premmnath**
(Teacher in Co-Maths)

Methodist College,
Colombo-03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலிகள்!



எம் .......
உள்ளத்தின் உள்ளே
உறைந்த நினைவுகளில்
உயிர்த்துக் கொண்டிருப்பவன் நீ
எம்முடன் உறவாடியவனே
நீ .......
பள்ளிக்கூடம்தான்
மாறியதாகக் கூறினார்கள்,
ஆனால் ....... நீ
பாதையே மாறினாய்
பாதியிலே தொலைந்தாய்
என்ற .......
செய்தி கேட்ட போது
எம்மால் நம்ப முடியவில்லை
ஏனெனில் .......
நீ எம்முள்
இன்னமும் உயிர்த்துக் கொண்டிருக்கிறாய்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

## நன்றி நவில்கின்றோம்!

- **ப**ல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்த சட்டத்தரணி கௌரவ திரு. கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும்,
- **எ**மக்கு வேண்டிய வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வரும் அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி அவர்களுக்கும்,
- **உ**யர்தர மாணவர் ஒன்றியத்தை சிறந்த முறையில் வழிநடாத்துகின்ற பொறுப்பாசிரியர் க. சேய்ந்தன் அவர்களுக்கும், ஏனைய ஆசிரியர் களுக்கும்,
- **நா**ம் அழைத்தபோது காலம் தாழ்த்தாது வருகை தந்த பிற பாடசாலை மாணவ மாணவியருக்கும், ஆசிரியருக்கும்,
- **எ**மது வருடாந்த ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற எம்மோடு தோள் கொடுத்துதவிய இந்துவின் மைந்தர்களுக்கும்,
- **சி**கரம் இதழிற்கு விளம்பரங்களைத் தந்த விளம்பரதாரர்களுக்கும்,
- **இ**ந்துவின் உயர்தர மாணவர் வருடாந்த ஒன்றுகூடலுக்கு நன்கொடை வழங்கியவர்களுக்கும்,
- **இ**ந்துவின் புகழ் பரவ ஒலி, ஒளி வடிவமைப்பு வழங்கியவர்களுக்கும்,


**எமது உள்ளத்தால் உவந்தளிக்கும்.**

**நன்றிகள் உரித்தாகுக!**


**உயர்தர மாணவர் ஒன்றியம்-2002,**
**இந்துக் கல்லூரி,**
**கொழும்பு-04**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Memorable Moments




# Memorable Moments



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Memorable Moments



நூலகம்

*With best compliments*

*from:*



MF Massey Ferguson

Perkins

Kugan Motor Stores

*Importers & Dealers in Tractor & Motor Spares*

**64, GALPOTHA STREET, COLOMBO-13, SRI LANKA.**

**Tel: 445924, 436865**
**Fax: 436865**
**Res: 522473**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*

*from*



## *V.J.P. International Book Shop*



**240, Galle Road, Wellawatte,**

**Colombo-06, Sri Lanka.**

**Fax: 503141 Tel: 074-515024**

Printed by: Luxmi Printer - 195, Wolfendhal Street, Colombo-13. Tel: 448545, 458273, 473533 Fax: 330588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org